1984 மார்ச் 15]

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது காப்பி பயிர் செய்கின்ற பகுதிகளில் அந்த நிலங்களில் தொடர்ந்து பல காலமாக காப்பி பயிர் செய்து வருவதால் உற்பத்தித் திறன் மிகவும் குறைந்து இருப்பதாகவும், என்னுடைய தொகுதியான சத்தியமங்கலம் தொகுதியில் கோட்டாடை, மாவள்ளம், பெஜலட்டி போன்ற பகுதிகளில் ஏற்கனவே தோட்டக்கலை மூலமாக காப்பிச் செடிகள் கொடுக்கப்பட்டு, அவற்றை வீடுகளில் பயிர் செய்வதன் காரணமாக, நல்ல விளைச்சல் கிடைத்து இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அந்த அடிப்படையில் அந்தப் பகுதிகளில் காப்பி பயிர் செய்ய அதிக கவனம் செலுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தோட்டக்கலைத் துறை அத்தகைய ஏற்பாடுகளைத்தான் செய்து கொண்டு இருக்கிறது. ஏறத்தாழ மொத்தம் 10 000 காப்பி நாற்றுகள் அந்தப் பகுதியில் விநியோகிக்கப்பட்டு இருக்கின்றன. தொடர்ந்து அந்த முயற்சியில் ஊக்கம் தருகின்ற வகையில் துறை செயல்படும்.

திரு. ஆர். ரங்கசாமி : தலைவர் அவர்களே, அங்கே அதிக நிலங்களில் காப்பி பயிர் செய்ய அரசு ஊக்கம் அளிக்கின்ற வகையில் அந்தப் பகுதி மக்களுக்கு கடன் வசதியோ அல்லது அரசு மானியமோ, அல்லது உதவியோ செய்து கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 50 சதவீதம் மானியம் ஏற்கனவே வழங்கப்படுகிறது.

திரு. சீ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, [மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காப்பி பயிர் செய்வதைப்பற்றிச் சொன்னார்கள். அங்கேயுள்ள விவசாயிகளுக்கு இலவசமான முறையில் காப்பி நாற்றுகள் வழங்குவதற்கு வசதியான முறையில் அந்தப் பகுதியில் காப்பி நாற்றங்கால் பண்ணை அமைக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இப்போதுள்ள திட்டப்படி, சின்னகல்ராயன் மலைப்பகுதியில் 90 ஏக்கர் பரப்பளவில் மாதிரி காப்பித் தோட்டம் அமைக்கும் செயற்குறிப்பு இருக்கிறது.

தொண்டாமுத்தூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டும் திட்டம்]

322—(*வினா 21649)—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் தொண்டாமுத்தூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டும் திட்டம் உள்ளதா ?

(ஆ) இத்திட்டம் எப்பொழுது முடிவுறும் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டம் தொண்டாமுத்தூரில் நிலம் வாங்கி விற்பனைக் கூடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1985–86 ஆம் ஆண்டிற்குள் முடிந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பகுதி விவசாயிகளைக் கொண்டிருக்கும் தொண்டாமுத்தூர் பகுதியில் கடந்த 5 ஆண்டுகாலமாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டும், அது செய்து முடிக்கப்படாமல் இருக்கிறது. அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு விட்டதா? எப்போது கட்டுமானப் பணிகள் துவக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஏற்கனவே எடுக்கப்பட்ட இடங்களில் ஒரு சில பிரச்னைகள் வந்தன. அதனால் வேறு இடம் பார்ப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் நிலத்தைக் கையகப்படுத்தி, பின்னர் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தை மதிப்பீடு செய்கிறபோது அங்கே இருக்கிற மார்க்கெட் விலையைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் வருவாய்த்துறை மதிப்பீடுகளைச் செய்வதால், விவசாயிகள் நிலத்தைக் கொடுக்க மறுக்கிறார்கள் அல்லது வழக்காடு மன்றத்திற்கு போகிறார்கள். இதைப் பொறுத்தவரையில் வருவாய்த் துறைக்கு தகுந்த உத்தரவுகளைப் போட்டு, ஓரளவு நியாயமான விலையை, மார்க்கெட் விலையை அனுசரித்து, விலையை நிர்ணயிக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுமா? இப்படி நிலம் கையகப்படுத்துவதில் தாமதம் ஏற்படுவதால் கட்டுமானப் பணிகள் நாளுக்கு நாள் உயர்ந்து வருகின்றன. ஏற்கனவே அந்தக் கட்டுமானப் பணிகள் இரண்டு மடங்கு ஏறியிருக்கிறது. இதைத் தடுக்கும் முறையில் நிலத்தின் விலையை நிர்ணயிக்கும் போது, மார்க்கெட் விலையையும் கருத்தில் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, உறுப்பினருடைய ஆலோசனையை துறைக்குத் தெரிவிக்கப்படும்.

பேச்சிப்பாறையிலுள்ள அன்னாசிப்பழப் பண்ணை.

*323—(*வினா 21679)*—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் பேச்சிப்பாறையிலுள்ள அன்னாசிப் பழப் பண்ணையிலிருந்து அரசுக்கு லாபம் கிடைக்கிறதா ?